
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 மார்ச் - 1999 இதழ் - 3



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/– மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை" | 1 |
| 2. | பாடுவது எப்படி? | 10 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 19 |
| 5. | நீ உன் கடமையைச் செய்கிறாயா? | 22 |
| 6. | ஆறுதலின் மகனென்று அழைக்கப்பட்டவன் | 26 |
| 7. | இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்? | 29 |
| 8. | தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள் | 32 |

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 12 MARCH -1999 Issue -3


ஆசிரியவுரை

## " இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை"

நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து " மாபெரும் போதகர்" என்ற சிறப்புப் பெயரை சர்ச்சைக்கிடமின்றி சான்றோரால் பெற்றவர். அவருடைய பேச்சில் எளிமையும். வலிமையும் மாத்திரமல்லாமல் கனிவும். கருத்தாழமும். சொல்லாட்சியும் மிகுந்து காணப்பட்டது. இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும். புரிந்து கொள்வதற்குச் சிரமம் என்றும் சொல்லப்படும் பகுதிகள் இல்லையென்று வேதத்தை ஆழ்ந்து படிக்கும் ஒருவனால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். ஆனால் அவர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் மாத்திரம் வேதத்தை மேலெழுந்தவாரியாகப் படிக்கும் அநேகரின் புருவத்தை உயர்த்தி விடுகிறது. அதற்குக் காரணம் நிச்சயமாக நமதாண்டவரல்ல. இருப்பினும். அவர் தனது தீர்ப்பில் தவறிழைத்து விட்டதைப் போல ஒரு மாயத்தோற்றம் கண்ணுக்கு தெரியும் என்பதை பெரும்பாலும் நாம் மறுப்பதற்கில்லை.

இச்சம்பவம். இயேசுவின் பூமிக்குண்டான வாழ்வின் கடைசி ஆறு நாட்களில் நடந்த ஒன்று. பஸ்கா பண்டிகை சமீபத்திருந்த ஒரு சந்தர்ப்பம் அவரின் பூலோக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். ஜீவனுக்குண்டான வழியைப் போதிக்கும்படி பூமிக்கு வந்த இயேசு. தனது

கடைசி கட்ட போதனையில் தீவிரம் காட்டியிருந்த நேரம். எரிகோவிலிருந்து எருசலேமுக்கு வரும்வழியில். எருசலேம் பட்டணத்துக்கு வெளியே இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒலிவமலையின் அடிவாரத்திலுள்ள பெத்பகே. பெத்தானியா கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது வழக்கம் போல். மார்த்தாள். மரியாள். லாசரு இவர்களுக்குச் சொந்தமான வீட்டில் தங்கினார். மரியாள் விலையேறப்பட்ட களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து. அதை இயேசுவின் பாதங்களில் பூசி. தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தது". (யோவா் 12:2)

அத்தருணத்தில்தான் அடுத்தநாளில் இயேசு ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியின் மீதேறி. வெற்றி வீரராக எருசலேமுக்குப் பவனி வந்தார். அப்போது. தங்களின் பரவசத்தை வெளிப்படுத்த விரும்பிய பெருங்கூட்டம். வஸ்திரங்களை வழியிலே விரித்தது. அத்தோடு திருப்தியடையாமல் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பவும் செய்தது. **"ஓசன்னா"** என்ற முழக்கம் விண்ணை முட்டியது. வெகு ஜன அங்கீகாரம் வெகுவாய் கிடைத்தது. திரளான ஜனங்கள் முன்னும். பின்னும் வர. நகர வீதியில் வலம் வந்தார். எருசலேமில் இருந்த பரிசேயர். சதுசேயர் என்பவர்களின் அசுர செல்வாக்கால். இயேசுவுக்கு எருசலேமில் இவ்வளவு பெரும் கூட்டம் கூடினதில்லை. ஆகவே. இயேசு எருசலேம் தேவலாயத்துக்குள் பிரவேசித்து. எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபோது கூட அவருடைய எதிர்ப்பாளர்களால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை. (மாற்கு 11:1-11)

சரி. அன்று இராத்தங்க பெத்தானியாவுக்கு வந்து. மீண்டும் எருசலேமுக்குப் போகும் போதுதான். நமது தலைப்புக்குண்டான சம்பவம் நடந்துள்ளது. **"மறு நாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திபழக்காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து: இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்க கடவன் என்றார்"**. (மாற்கு 11:12 - 14).

இந்தப் பகுதியைப் படித்து விட்டு. புரிந்து கொள்ளமுடியாமல் வாலிபன் ஒருவன் வந்தான். அத்திப்பழக்காலமல்லாத ஒரு சமயத்தில் கனியைத் தேடுவதே தவறு. ஆனால். தேடினது போதாதென்று அதை சபிக்கவும் செய்திருக்கிறாரே இயேசு. இது எப்படி நியாயமாகும்? என்று கேள்வி எழுப்பி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான் அவனால். இதன் பின்னனியை அறிந்து அதன் சாரத்தைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. இயேசுவைக் குறைசொல்லவும் மனமில்லை.

அவன் சிந்தையில் அப்பொழுது பெரும் தடுமாற்றம். ஒருவேளை இப்பகுதியை கவனமாகப் படிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சிந்தை வரவே செய்யும். அருமையானவர்களே! எப்பொழுதும் ஒன்றை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். இயேசு ஆண்டவர் ஒருபோதும் தனது பூமியின் வாழ்க்கையில் தவறு செய்ததில்லை. தேவனுடைய வார்த்தை கூறுவதைக் கவனியுங்கள். " அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேது 2:22). ஆகவே. இப்படிப்பட்ட சமயங்களில். நம்முடைய புரிந்து கொள்ளுதலில் உள்ள கோளாறைக் களை ந்தெறிய முயற்சிக்க வேண்டுமேயொழிய. தேவ குமாரன் மீது குறைசொல்லத் துணிந்துவிடக் கூடாது.

இயேசுவின் வார்த்தைகளில் மறைதிந்திருந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு அத்திமரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம். அத்திமரம் மற்ற மரங்களைக் காட்டிலும் வித்தியாசமானது என்று சொல்வதைவிட விநோதமானது என்று கூறுவதுதான் சரியானது. பொதுவாகவே. உலகில் ஏனைய மரங்கள் அனைத்தும் துளிர்த்து. தழைத்து. பூத்துக் குலுங்கி. பிஞ்சாகி. காயாகி பிறகு கனிகொடுக்கும். ஆனால். பெலஸ்தீனா தேசத்தில் வெகுவாகக் காணப்பட்ட இம்மரங்களோ முற்றிலும் வேறுபட்டு. காய்த்து. கனிந்த பிறகு இலைகளைக் கொடுக்க ஆரம்பிக்குமாம். ஆக. இம்மரத்தில் இலைகள் இருந்தால் கனிகள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது யதார்த்த நிலை. ஒருவன் இம்மரத்தில் கனி இருக்குமா? இருக்காதா? என்பதை இதன் இலைகளைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

வேதாகமத்தின் பக்கங்களில் இம்மரத்திற்கு ஒரு சிறப்பிடம் உண்டு. தேவனால் எத்தனையோ மரங்கள் படைக்கப்பட்டிருந்தாலும். இதன் பெயர்தான் முதன் முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் இலைகள்தான் ஆதிப் பெற்றோரின் நிர்வாணத்தை மறைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆதி 3:7). இன்னும் இம்மரங்களின் கனிப் பெருக்கம் ஒரு தேசத்தின் சுகமான வாழ்வுக்கும் (I ராஜா 4:25) கனியற்ற நிலைமை அதன் வீழ்ச்சிக்கும் அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சராசரியாக 35 அடி உயரம் வரை வளரும் இம்மரம். கிளைகள் பலவிட்டு. அகன்ற இலைகளைக் கொண்டிருப்பதால். நல்ல நிழல் தந்து அநேகருக்குப் பயன் தரும் (மீகா 4:4 யோவா 1:48) இதன் கனிகள் நல்ல பதார்த்தங்கள் பல செய்வதற்குப் பயன்பட்டதோடு மாத்திரமல்லாமல் (1 சாமு 25:18) மருத்துவ ரீதியாகவும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (2 ராஜா 20:7).

இப்படி நன்மைகள் பல தரும் அத்திமரத்தை இயேசு சபித்திருக்கிறா ரென்றால் அதற்குச் சரியான காரணம் இல்லாமலிருந்திருக்காது. கண்டிப்பாக. தன் காலைப் பசியை ஆற்ற உதவவில்லையென்பதற்காக. அவர் சபித்திருக்கமாட்டார். ஏனெனில். அவர் 40 நாட்கள் வெற்றிகரமாக

உபவாசமிருந்த தேவகுமாரன். ஆகவே. ஒரு வேளை உணவுக்காக. அவர் அப்படிச் செய்திருக்கமாட்டார். அல்லது ஏதோ அத்தி மரம் தன்னை ஏமாற்றிவிட்டதென்று எரிச்சலடைந்தும் அதைச் சபித்திருக்கமாட்டார். ஏனெனில். காரித்துப்பிய போதும். கூட கலங்காமல் ஏற்றுக் கொண்டவராவர் அப்படியானால். பின்னே. என்னதான் காரணமாக இருக்கும்? **ஆம். மாயமான ஒரு தோற்றத்தோடு காட்சி தந்த அந்த மரத்தைக் கொண்டு, ஒரு மாபெரும் உண்மையை, ஒரு யதார்த்த செய்தியை, தன்னைச் சுற்றிலுமிருந்த மக்களுக்கும், இனிவரும் காலங்களிலெல்லாம்,வாழும் மக்களுக்கும் உணர்த்த முடியுமென்று நம்பினதால்தான், அப்படிச் செய்திருப்பார் என்று நாம் திடமாகச் சொல்ல முடியும்.** ஏராளமாக இருந்த அத்திமரங்களில் ஒன்று பட்டுப் போவதைப் பற்றி அவர் அங்கு கவலைப் படாமல். எண்ணிலடங்காத மக்கள். அம்மரத்தைப் போல. மாயமான வாழ்க்கை வாழ்ந்து. ஆவியில் பட்டுப் போய் விடக்கூடாது என்பதற்காகவே கவலைப்பட்டார். அது மாத்திரமல்ல. போலி பக்தியோடு வெளிவேஷமிட்டு வாழ்பவர்களுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை தேவையென்பதையும் உணர்ந்து சரியாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்த எண்ணினார். அதன் விளைவுதான் அத்தி மரம் சபிக்கப்பட்டது. புரிகிறதா?

சரி. இந்த வேதபகுதியிலிருந்து. நாம் நமக்குப் பயன்படும் மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I. இயேசு என்ன தேடினார்? – என்ன தேடுகிறார்?

முதலாவது. இயேசு அத்திமரத்தினிடத்தில் என்ன தேடினார்? என்பது. "அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்தி மரத்தைத் தூரத்திலே கண்டு. **அதில் ஏதாகிலும் அகப்படுமோ** என்று பார்க்க வந்தார்" (வ.13) ஆம். இயேசு அதனிடம் கனிகளைத் தேடினார். இங்கே ஒன்றைக் கவனியுங்கள். "மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறியும் இயசேவுக்கு" (யோவா 2:25) மரத்தில் கனியிருந்திருக்குமா அல்லது இருந்திருக்காதா என்பது தெரியமாலிருக்க வாய்ப்பில்லை. ஆயினும். அதன் புறத்தோற்றம் அப்படியிருந்தபடியால் அவர் தேடினார். அத்திப்பழக்காலமாக இல்லாவிட்டாலும் கூட. **அம்மரம் தான் எல்லா அத்தி மரத்தைக் காட்டிலும் விசேஷமானது என்பதைப் போன்று மாயமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆகவேதான் இயேசு கனிகளைத் தேடினார். ஆனால், அங்கோ கனியில்லை.**

இயேசு அத்திமரத்தில் கனியைத் தேடினார் என்பதை விட மாயமான தோற்றத்தோடு சமுதாயத்தில் உலா வந்த யூதர்களிடம் கனிகளைத் தேடினார் என்பதுதான் சரி. யூதர்களிடம் அவர் கனியைத் தேடினதற்கு காரணமும்

இல்லாமலில்லை. ஆம். பூமியிலுள்ள சகல ஜனங்களிலும். அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் (உபா 7:6) தேவனாலே. பல அற்புதங்களைத் தங்கள் வாழ்க்கையில் கண்டவர்கள். ஆச்சரியமாக வழி நடத்தப்பட்டவர்கள். தேவனின் தெய்வீகப் பாதுகாப்பை அனுபவித்தவர்கள். ஆனால் அவர்களிடமோ. கனியற்ற ஒரு போலி வாழ்க்கைதான் காணப்பட்டது. அவர்களாலே. ஒரு அத்திமரம் பட்டுப்போயிற்று பாவம்.

அருமையானவர்களே! அன்று மாயமான தோற்றத்தோடிருந்த அத்திமரத்தினிடத்தில் கனிகளைத் தேடின இயேசு. தேவனால் விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களிடத்தில் கனிகளைத் தேடின இயேசு. இன்று நம்மிடத்தில் கனிகளைத் தேடுகிறார். **அன்று தேடினார். இன்று தேடுகிறார்.** ஆம்.கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உங்களிடம். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள உங்களிடம். கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் உங்களிடம் கனிகளைத் தேடுகிறார்.

நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர். தேவனுடைய அநாதி தீர்மானத்தின் படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (எபே 1:4) இயேசுக்கிறிஸ்துவி ன் சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டவர்கள் (1 தெச 2:14) ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டதோடு. ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும். பரிசுத்த ஜாதியாகவும். அவருக்குச் சொந்தமானவர்களாகவும் மாற்றப்பட்டவர்கள் (1 பேது 2:9) ஆனால். நம்முடைய வாழ்க்கை எப்படியுள்ளது? சிந்திப்போம் இயேசு நம்மிடம் உரிமையோடும் ஆவலோடும் வரும்போது. கனிகளைப் பார்க்கிறாரா? அல்லது இலைகளை மாத்திரம் காண்கிறாரா? நெஞ்சிலே கையை வைத்து நாம் பதில் சொல்வோமானால். நம்மிடம் ஆவியின் கனிகள் அறவே இல்லை என்பதுதான் உண்மை. நம்முடைய பக்தியின் இலட்சணம் இந்தளவு தான் உள்ளது.

யோவான் நற்செய்தி நூலில் வரும் ஒரு அழகான வசனத்தைக் கவனியுங்கள். **"...ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்..."**(15:5).

எனக்கருமையான சகோதரனே! சகோதரியே! நம்முடைய கிறிஸ் தவ ஜீவியம் **"இலைகளை மாத்திரம்"** கொண்டிருக்கக் கூடியதாக இருந்தால். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்பது பொருள். ஆகவே. நாம் இலைகளோடு. கனிகளையும் கொண்டிருக்க கிறிஸ்துவிலும். அவருடைய உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டிலும் நிலைத்திருப்போம்.

## II.இயேசு என்ன கண்டார்? – காண்கிறார்?

கனியை ஆவலோடு தேடி அத்திமரத்தின் அருகில் வந்த இயேசு என்னத்தைக் கண்டார்? வசனம் சொல்வதைக் கவனியுங்கள் **"இலைகளை யல்லாமல் வேறொன்றையும் காணவில்லை"** (வச 13) எப்படிப்பட்ட ஏமாற்றம் பாருங்கள். ஏற்கனவே சொன்னதுபோல் அவரை ஏமாற்றியது அத்திமரம் என்று மாத்திரம் நினைத்துக் கொள்ளாதீர்கள். யூத மதத் தலைவர்களும். யூதர்களும். சேர்ந்தே இயேசுவை ஏமாற்றியிருந்தார்கள். **மத்தேயு 23ம் அதிகாரம்** முழுவதும் அவர்களைத் திட்டித் தீர்த்தே எழுதப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ளது போல கடுமையான வார்த்தைகளை இயேசு தனது ஊழியத்தின் பாதையில் பெரும்பாலும் உபயோகித்ததில்லை. அந்த மாயக்காரர்களுடைய வாழ்வில். ஒரு கனி கூட இல்லாமல் **"இலைகளை மாத்திரம் கண்டதால்"** தான் அந்தளவு சுடு சொற்கள் நமதாண்டவரிடமிருந்து எகிறி வந்துள்ளது.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில். கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள நமது வாழ்க்கையில். கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற நமது வாழ்க்கையில். இயேசு இன்றைக்கு என்னத்தைக் காண்கிறார்?

இந்த இடத்தில் நாம் நம்மை தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். மெய்யான தேவனை நான் தேவனாகப் பெற்றிருக்கிறேன் என்று மார்தட்டிக் கொள்கிறோம். பரம் செல்ல கிறிஸ்துவின் மார்க்கம் தான் ஒரே மார்க்கம் என்று பெருமை பேசவும் நாம் தவறுவதில்லை. கர்த்தருடைய சபைதான் உண்மையானது என்று எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டுமென்று பேராசையும் படுகிறோம். அது மாத்திரமல்ல வேதம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம் என்றும் வேதம் பேசாத இடத்தில் நாங்கள் மௌனமாக இருக்கிறோம் என்று தம்பட்டம் அடிக்கவும் செய்கிறோம்.

ஆனால் உண்மை நிலை என்ன? மிகப் பெரும்பாலும் **இலைகளுள்ள வாழ்க்கையாகவே உள்ளது.** மெய்யான தேவனைப் பற்றி பயம் நம்மவர்களிடம் மருந்துக்கும் இல்லை. கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பற்றிய முழு உண்மை தெரியவில்லை. புதிய ஏற்பாட்டுச் சபையின் மேன்மையை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை அதை அறிந்திருந்தாலும் அதன்படி வாழ வேண்டுமென்ற வாஞ்சையும் வைராக்கியமும் இல்லை இவைகனைத்தும் இலைகள் மாத்திரமுள்ள வாழ்க்கையின் அடையாளங்களே. இப்படிப்பட்ட வாழ்க்கையை தேவன் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

நம்முடைய ஆன்மீக வாழ்க்கை இலைகள் மாத்திரம் உடையதாயிராமல் கனிகளையும் பெற்றிருக்க வேண்டுமானால். அது தேவனுடைய வார்த்தைகளால்

சாரமேற்றப்பட்டிருக்க வேண்டும். அதாவது. வேத வசனங்களுக்கு மாறாக எதையும் செய்ய மாட்டேன் என்ற தீர்மானம் எடுப்பதோடு நின்றுவிடாமல். வேதவசனங்களின் போதனைக்கு மாத்திரம் என்னை ஒப்புக்கொடுப்பேன் என்றும் முடிவு செய்ய வேண்டும். அதன் பொருள். நம்முடைய இரட்சிப்பு. நாம் அங்கம் வகிக்கும் சபை. நம்முடைய ஆராதனை முறை இவைகளெல்லாம் வேத வசனங்களினடிப்படையில் இருக்கிறதா என்று முழுமையாகச் சோதித்து உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றிலே தவறுசெய்தால் கூட எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான் என்று வேதம் கூறுகின்றபடியால் (யாக் 2:10) நம்முடைய ஆன்மீக வாழ்க்கையைக் கவனமாக சீர்தூக்கி பார்க்கவேண்டும். ஆம். ஒன்றிலே தவறிருந்தால் கூட நமது வாழ்க்கை கனியற்ற. **இலைகள் மாத்திரம்** உள்ள வாழ்க்கையாகவே காட்சித் தரும்.

அன்று அத்திமரத்தை கண்டு இயேசு ஏமாந்ததைப் போல நம்முடைய வாழ்க்கையைக் கண்டும் ஏமாந்து போவார். அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம். அவரை ஏமாற்றுவது தவறு மாத்திரமல்ல. பாவமும் ஆகும். பாவம் நம்மை நரகத்துக்கு அழைத்துச் செல்லும். ஆகவே. இந்த கபட வாழ்வுக்கு இந்நிமிடம் முதல் சாவு மணி அடிப்போம்.

## III. இயேசு என்ன செய்தார்? – என்ன செய்வார்?

இறுதியாக. நாம் அறிந்துகொள்ள வேண்டியது அத்திமரத்திடம் கனியைத் தேடி. இலைகளை மாத்திரம் கண்ட இயேசு என்ன செய்தார் என்பது. வசனம் சொல்வதை இங்கே பாருங்கள். **"இதுமுதல் ஒருக்காலும், ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்"** (வச 14). ஆம். வேஷமிட்ட விருட்சத்தை சபித்தார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு. எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார் என்பதை கவனிக்கத் தவறிவிடாதீர்கள். இந்தப் பருவத்திலே மாத்திரமல்ல. **"ஒருக்காலும்"** கனியிருக்காது என்றார். மறுநாள் காலையில் பார்க்கும் போது. மரம் **பட்டுப்போயிருந்தது** என்று வசனம் சொல்கிறது (11:20)

ஏற்கனவே. நாம் பார்த்தது போல. அத்திரமரத்தைச் சபித்து அதைப் பட்டுப் போகச் செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசையல்ல. ஆனால் தன்னை சுற்றி நின்றவர்களிலும். யூத சமுதாயத்திலும் இருக்கிற ஏராளமான மக்களின் வேஷத்தை. போலியான பக்தியை. மாயமான தோற்றத்தைக்களைந்தெறிய வேண்டுமென்பது அவரின் ஒரே நோக்கம். அங்கே நடப்பதைப் பார்த்து. ஜனங்கள் திருந்தவேண்டுமென்பது அவரின் அதிரடித் திட்டம்.

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே பார்க்கும்போது. அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம். கனிகொடாத வாழ்க்கை வாழ்ந்தபோது. பூமியின் சகல ஜனங்களுக்குள்ளும் அவர்கள் சிதறிப்போகும்படி தேவன் செய்தார். (ஆமோ 9:6-9).

எனக்கு அன்பானவர்களே! கனியில்லாத அத்திமரத்தையும். தனக்கு உண்மையில்லாத இஸ்ரவேல் தேசத்தையும் தண்டித்த நம் ஆண்டவர். நம்மை மாத்திரம் சும்மாவிட்டு விடுவாரா. என்ன? அவரை நாம் நீதியுள்ள தேவன் என்று வாய் நிறையச் சொல்கிறோம். அது உண்மையானால். அந்த நீதியை நம்மீது செலுத்தாமல் விடுவாரா? கண்டிப்பாக நீதியாக நியாயந்தீர்த்தே தீருவார்.

யோவான் 15:6ல் கனிகொடாத கொடி அக்கினியிலே போடப்படும் என்று காண்கிறோம். கவனிக்க மறந்துவிடாதீர்கள் **அக்கினியிலே** என்று உள்ளதை. **அதாவது எரிந்து, வெந்து, முடிந்து போகும் அக்கினியில் போடப்படும்**. ஆனால். மத்தேயு 25:14:பார்த்தால். அங்கு இறுதி நியாயத்தீர்ப்பில் இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து இவ்விதம் சொல்வார் என்றுள்ளது. **"சபிக்கப்பட்டவர்களே"** என்னைவிட்டு பிசாசுக்காகவும். அவன் தூதர்களுக்காகவும். ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற **நித்திய அக்கினியிலே** போங்கள்" என்று.

ஆம். **நித்திய அக்கினி, அது முடிவில்லாத அக்கினி, எரிந்தும் முடிந்து போகாத அக்கினி.** மரத்திற்கு முடிந்து போகும் அக்கினி. மனிதனுக்கு நித்திய அக்கினி. நீதியுள்ள நியாதிபதியாகிய இயேசு. கனி கொடாத மனிதனை. இலைகள் மாத்திரமே கொண்டுள்ள மனிதனை இவ்விதமாகவே நியாயந்தீர்ப்பார். தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள்.

ஆகவே. அன்பானவர்களே! இருதயத்தை சோதித்தறியும் தன்மை கொண்ட தேவனுக்கு முன்பாக நாம் பயந்து. நமது வாழ்க்கையில் அவரின் வல்லமையான வசனங்களுக்கு நடுங்கி ஜீவிப்போம். இலைகள் மாத்திரம் உள்ள ஒரு போலியான வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு. கிறிஸ்துவில். அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து. நிறைந்த கனிகளைக் கொடுத்து. சபைக்கும். சமுதாயத்துக்கும். சாட்சியாக வாழ்வோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். மறுமையை சுதந்தரித்து அவரோடு கூட நித்திய வாழ்வு வாழ்வோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**எஸ். ராஜநாயகம்**

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!

## காங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்தும்

# வேனிற்கால வேதாகம முகாம்

*மற்றும்*

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : ***YMCA*** **வளாகம், ஏலகிரிமலை** (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

**நாள் : மே மாதம் 3, 4, 5, 6, தேதிகள் (திங் - வியா) 1999**

## சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும். வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு. தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தலைசிறந்த ஊழியர்கள்
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்பவெப்பம்.
- குடுபத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை
- பெண்களுக்கு தனி இடவசதி

*உணவும், தங்குமிடமும் இலவசம்*
*பதிவுக் கட்டணம் ரூ. 80/- மட்டுமே*

தொடர்பு முகவரி : **கிறிஸ்துவின் சபை**
**195, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701**
Phone: 04257-20030

குறிப்பு : **சுமார் 200 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# பாடுவது எப்படி?

**நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவது எப்படி** என்ற தலைப்பின் கீழாக. தொடர்ந்து நாம் பார்க்கப் போகிறோம். நீங்கள் இருக்குமிடத்தில் ஏற்கனவே கர்த்தருடைய சபை இல்லாதிருந்தால். அங்கு கிறிஸ்துவின் 'சபை தொடங்குவது எப்படி என்பது குறித்து நாம் படித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். நீங்கள். கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இல்லாதிருந்தால். நீங்கள் கர்த்தரை விசுவாசித்து. உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி. கிறிஸ்துவை அறிக்கையிட்டு. பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று அங்கத்தினராகும்படி வேண்டுகிறோம். நீங்கள் அப்படிச் செய்தால். கர்த்தர் உங்களை இரட்சித்து. அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார்.(மாற்கு 16:16.அப் 2:47). பிறகு நீங்கள் வசிக்குமிடத்தில். ஒரு பிராந்திய சபையை தொடங்க முடியும். ஆகையால். ஒரு பிராந்திய சபையை தொடங்கும் முயற்சியை எடுக்கும்படியாய் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். உங்களது இம்முயற்சியில். உங்களோடு கடிதத் தொடர்பு கொள்வதின் மூலமும். பல நூல்களைக் கொடுப்பதின் மூலமும் இன்னும் பிற வகைகளிலும் நாங்கள் உங்களுக்கு உதவ முடியுமென்று நம்புகிறோம்.

மேற்சொன்னவைகளினிமித்தமாக. இப்பொழுது **"எப்படிப் பாடுவது"** என்று பார்ப்போம். நாம் ஆராதனை பற்றியும். ஆராதனையில் இருக்க வேண்டிய வித்தியாசமான பங்குகள் பற்றியும் படித்து வருகிறோம். அதுமாத்திரமல்ல. அவைகளின் முக்கியத்துவம் பற்றியும். ஒவ்வொரு பங்கையும் எப்படிச் செய்வது என்பது பற்றியும் நாம் விவாதித்து வருகிறோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருந்து தேவனை ஆராதிக்கும் போது. நாம் பாட வேண்டுமென்று வேதாகமம் திட்டமாகப் போதிக்கிறது. நாம் தேவனைத் துதித்துப் பாட வேண்டுமென்று நினைக்கும் போது. இது சம்பந்தமாக நிறைய வேத வசனங்களை நாம் குறிப்பிட முடியும். எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல். **"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி..."** (எபே 5:19) என்று கூறுகிறார். அவரே. கொலோசே பட்டணத்தாருக்கு. **"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக் கொருவர் போதித்துப் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி..."** என்கிறார்.(3:16). இந்த இரண்டு

வசனங்களில், பவுல், சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் பாடுங்கள் என்றும், இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் என்றும் கூறுவதை நீங்கள் கவனியுங்கள். இது கர்த்தர் அவருடைய பிள்ளைகள் வாய் வழியாகப் பாடவேண்டுமென்று விரும்பியதையே குறிப்பிடுகிறது. இதையே வேறுவிதமாகச் சொன்னால், பாடும் போது இசைக் கருவிகள் இருந்திருக்கக் கூடாது என்று தெரிகிறது. பெரும்பாலான மார்க்க பிரிவினைச் சபைகள், இன்றைக்கு தங்கள் ஆராதனைகளில், இசைக் கருவிகளை பயன்படுத்துவதால், நம்முடைய காலத்துக்கு இது விநோதமாகத் தெரியலாம். ஆனால், வேதாகமம், ஆராதனையில் இசைக்கருவிகள் உபயோகிப்பதை நியாயப்படுத்தவோ அல்லது ஊக்கப்படுத்தவோ இல்லை.

உலகில், இரண்டு வகையான இசை இருப்பதை நீங்கள் பார்க்கலாம். ஒன்று மற்றதைக் காட்டிலும் பழமையானது. அது குரல் இசை. ஒருவனுடைய குரல் நாளங்களைக் கொண்டு இந்த இசை உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய சப்தங்களின் கலவையால் உண்டாக்கப்படும் இசை தான் உலகிலேயே **அழகான இசை** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு இசை மனிதனால் உண்டாக்கப்பட்டுள்ளது. அது கருவிகளின் மூலம் வரும் இசை. ட்ரம்களை அடிப்பதின் மூலம், வயலின் போன்ற கருவிகளை மேலும் கீழும் இழுப்பதன் மூலம் மனிதனால் உண்டாக்கப்படுபவை. இவைபோக, பியானோ, ஆர்கன் என்று பல வகையான இசைக்கருவிகள் உண்டு. ஆனால், அவையாவும் உயிரற்றவை அவைகளுக்கு இருதயம் இல்லை. ஆனால், யாரோ ஒருவர் எடுத்துக் கையாளுவதின் மூலம் அவைகள் சப்தங்களை உண்டாக்குகின்றன. இப்பொழுது, இவ்விரண்டில் கர்த்தர் எதைக் கேட்கிறார். இருதயத்தில் பக்தியுடன் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டுமென்று பவுல் சொல்லியுள்ளதை ஏற்கனவே பார்த்தோம். எபிரேய ஆசிரியர், **"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்"**, என்று கூறுகிறார். (13:15). தேவ ஆவியைக் கொண்டு எழுதின எபிரேய ஆசிரியர், உதடுகளின் கனியைக் கொண்டு கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று கூறுகிறார். அதன் பொருள், நாம் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது குரல் நாளங்களைக் கொண்டு பாடவேண்டுமென்பது. இதை நாம் இப்படிக் கூற முடியும். கர்த்தர், அவரால் உருவாக்கப்பட்டவர்கள் தான் அவரைத் துதிக்க வேண்டுமென்று கூறுகிறார், மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளைக் கொண்டல்ல. தன்னைத் துதிக்க உயிருள்ளவை வேண்டுமென்று தான் கர்த்தர் கேட்கிறார், செத்துப் போய் உயிரற்றிருப்பவைகளைக் கொண்டல்ல.

ஆனால், சிலர் இரண்டுக்கும் ஒரு வித்தியாசமுமில்லையென்று சொல்வர். கவனிக்க வேண்டியது யாதெனில், ஆராதனைக்கு என்ன தேவையென்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகவே, நாம் அவருடைய விருப்பத்துக்கு இணங்க வேண்டும். இது நம்மைப் பிரியப்படுத்துகிற காரியமோ அல்லது மனிதனைப்

பிரியப்படுத்துகிற காரியமோ அல்ல. மாறாக. இது கர்த்தர் பிரியப்பட வேண்டிய ஒன்று. **நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன் என்று பவுல் கூறியுள்ளார்** (I கொரி 14:15).

உலக சரித்திரத்தின்படி. முதலாம் நூற்றாண்டு சபையில் தேவனை ஆராதிக்கும் போது. குரல் இசை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால். சில நூற்றாண்டுகள் கழித்து. மதத் தலைவர்கள் ஆராதனையில் கருவி இசையைப் புகுத்தியிருக்கிறார்கள். அக்கால கட்டத்தில் பெரும்பாலானவர்களால் அங்கீகரிக்கப்பட்டு. உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால். நாம் கர்த்தரை ஆராதிப்பதாக இருந்தால். ஆவியோடும். உண்மையோடும் ஆராதியுங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளபடி ஏன் ஆராதிக்கக் கூடாது? (யோ 4:24)

ஆராதனையில் ஏன் கருவி இசையை உபயோகிக்க வேண்டுமென்று நிறைய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் தர்க்க ரீதியாகவும். பொது அறிவின் படியாகவும் உள்ளதே தவிர. எதுவுமே தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லை.

கிறிஸ்தவம் தனித்துவம் உள்ள ஒரு மார்க்கம். பாடும் மார்க்கம். பாடல் கர்த்தரைத் துதிக்கும்படியாக மாத்திரமல்ல. கூடி வருகிறவர்களுக்கு இதைக் கொண்டு போதித்துப் புத்தி சொல்லவும் முடியும். இன்னும். ஒரு ஆராதனையின் உச்ச நிலைக்கு இது கொண்டு செல்லும்.

ஆகையால். கர்த்தரை ஆராதிக்கும் படியாக கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி வரும்போது. தேவனைத் துதிப்பதற்கு ஆராதனையில் உள்ள பங்குகளில். பாடுதலும் ஒன்றாக இருக்க வேண்டும். ஓரிடத்தில் கிறிஸ்தவர்கள் கொஞ்சமாக இருந்தாலோ அல்லது அதிகமாக இருந்தாலோ. பொதுவாக. ஒருவரோ அல்லது மேற்பட்டவரோ பாடலை வழிநடத்த முடியும். ஆகையால். ஓரிடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்கும் முயற்சியில் நீங்கள் இருந்தால். அங்குள்ள ஆண் அங்கத்தினர்கள். தங்களுள் ஒருவரைத் தெரிந்து கொண்டால். வசனங்களினடிப்படையிலான ஆவிக்குரிய பாடல்களில் அவர் வழி நடத்த முடியும்.

பாடுவதற்காக பாடல்களைத் தெரிந்தெடுக்கும் போது. எல்லோருக்கும் தெரிந்த பாடலாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால். கண்டிப்பாக அவை வசனங்களினடிப்படையில் இருக்க வேண்டும். அதாவது. அந்தப் பாடல்களில் உள்ள செய்தி. வேத வசனங்களின் உபதேசத்துக்கு ஒத்து வரவேண்டும். நீங்கள் தவறானதைப் பாடி. தவறானதைப் போதிக்க முடியும். ஒருவன் பாடும்போது. அந்தப் பாடலின் செய்தியை தியானிக்க வேண்டும். தன்னைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கும். தனக்கும் போதிக்கும்படியாக அந்தப் பாடலைப் பாட வேண்டும்.

மொத்தம் எத்தனை பாடல் இருக்கலாம் என்பதற்கு. குறிப்பிட்ட அளவு எதுவும் இல்லை. அது பாடலை நடத்துபவரையும். இருக்கின்ற நேரத்தையும்

பொறுத்தது. பொதுவாக. பாடலை நடத்துபவர். சபையாருக்கு முன்பாக நிற்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில். பொதுவாக. ராகங்களுக்கான குறிப்புகளடங்கிய பாடல் புத்தகங்களை கிறிஸ்தவர்கள் உபயோகிக்கிறார்கள். அந்த ராகக் குறிப்புகளை ஒருவன் அறிந்திருந்தால். முறையாகவும். சரியாகவும் அவனால் அந்தப் பாடலை இசைக்க முடியும். சில நேரங்களில். பாடலை வழி நடத்த கைச் செய்கைகளை உபயோகப்படுத்தலாம். ஆனால். உலகின் மற்ற பாகங்களில். வித்தியாசமான முறைகள் பின்பற்றப்படலாம். பாடலை நடத்துபவருக்கு பாடலின் வார்த்தைகள் மட்டும் இருக்கலாம். அப்போது அவர். தான். ஏற்கனவே கற்றுக்கொண்ட இராகத்தை உபயோகிக்கலாம்.

ஒட்டுமொத்த சபையும் பாடல்களில் பங்கு பெறவேண்டும். எல்லோரும் சேர்ந்து பாடும்போது ஒருவேளை அது உலகத்திலேயே சிறந்த பாடலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால். அது இருதயத்திலிருந்து பாடப்படுமானால். அது கண்டிப்பாக கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கும். நாம் பாடலைப் பாட விரும்பினாலும். அதன் மூலம் நாம் உற்சாகமடைந்தாலும். நாம் நம்மை குஷிப்படுத்துவதற்கு பாடலைப் பாடுவதில்லை. தனியாகப் பாடுவதற்கோ. குழுவாகப் பாடுவதற்கோ நாம் சபையாகக் கூடிவருவதில்லை. மாறாக. நாம் ஒட்டுமொத்த சபையாகச் சேர்ந்து சபையில். ஆராதனையில் பாட வேண்டும்.

சில சமயங்களில். நமது பாடல்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லையென்றால் நாம் பாடல் பயிற்சிக்காக கூடி வர வேண்டியிருக்கலாம். நாம் சில பாடல்களை புதிதாக கற்றுக் கொள்ள வேண்டியிருக்கலாம். அது திரும்பத் திரும்பப் பாடுவதின் மூலம் தான் முடியும். யார் நன்றாக பாடுகிறார்கள் என்பதற்காக நாம் முயற்சிப்பதில்லை. ஆனால். இது கர்த்தருக்காக செய்யப்படும் காரியமாக உள்ளபடியால். நாம் செய்வது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்கிறோம். கர்த்தருக்காகச் செய்யப்படுவது ஏனோ தானோ என்று இருக்கக் கூடாது என்பது தான் இதன் நோக்கம். வேத வசனங்களின்படி. சபையாகப் பாடுவதில் பெண்கள் பங்கு பெறலாம். ஆனால். அவர்கள் வெளிப்படையாக பாடலை நடத்துவதற்கு வேதத்தில் கட்டளையோ. முன்னுதாரணமோ இல்லை. சபையில் பெண்களின் பங்கு என்ன என்பதை கொஞ்சம் பிறகு பார்ப்போம்.

நமது. இளம் சகோதரர்களை பாடல்களை நடத்தும்படி நாம் ஊக்கப்படுத்துவது அவசியம். அப்படிச் செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதின் மூலமோ அல்லது மூத்த ஒரு சகோதரருடன் சேர்ந்து விசேஷித்த பயிற்சி பெறுவதின் மூலமோ இதைச் செய்ய முடியும்.

இந்தப் பாடம் உங்களுக்கு உதவியாக இருந்திருக்குமென நம்புகிறேன். நீங்கள் இருக்குமிடத்தில் சபையை ஆரம்பிப்பதற்கு. உங்களுக்கு உதவிகரமாக. இருக்கும்படி. தொடர்ந்து அடுத்த பாடத்தில் படிப்போம்.

**J.C. சோட்**

# நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆண்ட்ரு தன் கையில் அட்டவணையைப் பிடித்துக்கொண்டு. சோர்ந்து போய் ரேச்சலைப் பார்த்து "சரி. நீ என்ன நினைக்கிறாய்" என்றான்.

நம்முடைய நிஜ வாழ்க்கையில் பார்ப்பதற்கும். வேதாகமத்தில் படிப்ப தற்கும். **"சுத்தமாக ஒத்துவரவில்லை, அப்படித்தானே"** வேதாகமத்தில் எல்லாம் தெளிவாகவும். எளிமையாகவும் உள்ளது. ஆனால். பாதிரிகளிடத்தில் பேசினால். அவர்கள் வித்தியாசமான எண்ண முடையவர்களாயிருக்கிறார்கள். பாப்திஸ்து சபை ஊழியரின் கருத்து வித்தியாசமாக உள்ளது. மற்ற பிரிவினைச் சபைகளை சேர்க்காது. பாப்திஸ்துகளில் மட்டும் 30 வித்தியாசமான பரிவுகள் இருப்பதாகச் சொன்னார். எல்லா வற்றையும் புரிந்து கொள்ள முயற்சித்தால் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

"அது. தான் பிரச்சினை" என்றான் ஆண்ட்ரு. அவைகள் எல்லாமே ஒன்றுக் கொன்று முரண்படுவதால் எல்லா வற்றையும் ஒட்டுமொத்தமாக புரிந்து கொள்ள முடியாது என எண்ணுகிறேன். இரட்சிப்பு பற்றி. கத்தோலிக்கர்களின் கொள்கை. பாப்திஸ்துகளுடன் ஒரு போதும் ஒத்துப் போகாது. ஏனெனில். ஒருவர். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். மற்றவர் அவ்வாறு செய்வதில்லை. ஒருவர் ஞான ஸ்நானத்திற்கு தெளிக்கின்றனர். மற்றவர் தண்ணீருக்குள் முழுக வேண்டு மென்கின்றனர். இவர்கள் இருவருமே அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்துடன் முரண்படுகின்றனர். அங்கே **ஞானஸ் நானத்தின் நோக்கம்** பாவமன்னிப்புக்கு **என்று** நாம் திரும்பத் திரும்ப வாசித்திருக்கிறோம்.

பிரசங்கியார் குறிப்பிட்ட வசனத்திற்கும். வேதாகமத்தில் நாம் வாசித்ததற்கும். இருக்கிற முரண்பாடு பற்றிய உனது கேள்வி சரியான ஒன்று. வேதாகமம் ஒத்துப் போகவில்லையா? அப்படி ஒத்துப் போகவில்லையென்றால் எங்கே தவறு? என்று ரேச்சல் கேட்டாள்.

"சரி. உலகப்பிரகாரமாக ஒரு காரியத்தை எப்படிச் செய்ய வேண்டுமென்று வழிமுறைகள் கொடுக் கப்பட்டிருக்குமானால் அந்த வழிமுறைகள் சரியாக எழுதப்பட்டிருக் குமானால் - பிறகு ஒரு பகுதி மற்றொரு பகுதியோடு முரண்படுமானால் - நான் தவறு எங்கு நடந்திருக்கிறது என்று கண்டுபிடிக்க திரும்ப சென்று முழு காரியங்களையும் மீண்டும் படிப்பேன். வழிமுறைகள் எல்லாம் ஒன்றோடொன்று ஒத்துப்போகும் வரை படிப்பேன்."

"ஆவிக்குரிய காரியங்களிலும் இது சரியாக இருக்குமா?" என்று ரேச்சல் கேட்டாள். அதை நாம் எபேசியரில் பார்ப்போம். கிருபையினாலே விசுவாசத் தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு". இதை நாம் பகுதி பகுதியாகப் பார்ப்போம்" கிருபை யினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்......"

"நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோமா? தேவனுடைய கிருபை இல்லாமல் இரட்சிக்கப்பட முடியுமா?

"ஆவிக்குரிய ரீதியில் நாம் பெற்றிருக்கும் அனைத்துமே தேவனுடைய கிருபையால் கிடைத்துள்ளது. நாம் என்னதான் முயற்சி நமக்காக எடுத்தாலும் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற முடியாது. வேறு யாரும் அதை நமக்காகச் செய்ய முடியாது ஆகவே இது தேவ கிருபையினால் தான் நடந்தாக வேண்டும்".

ஆகவே. வசனத்தின் இந்தப் பகுதி. நாம் ஏற்கனவே படித்ததை ஒத்து வருகிறது. இப்பொழுது. விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்ற பகுதியைப் பற்றி என்ன?' அப்போஸ்தலரில் நாம் படித்த மாதிரி. ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் அவசியமா?

ஆம். அவர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கும்படி எப்பொழுதும் சொல்லப்பட்டிருக்கிறார்கள்".

" விசுவாசமில்லாமல் ஞானஸ்நானப்படுத்த முடியுமா? என ரேச்சல் கேட்டாள்".

"இல்லை" முடியாது. ஏனெனில் இயேசுவைப் பின்பற்றி அவருடைய இராஜ்ஜியத்தில் அங்கமாவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்ன முடிவெடுக்க வேண்டுமென்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள். பவுலால் சந்திக்கப்பட்ட ஒரு கூட்டத்தார். ஞானஸ்நானம் பெற்ற போது சரியான விசுவாசம் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் வேத வசனங்கள் சரியாகப் போதிக்கப்படவில்லை. ஆகவே. அந்த ஞானஸ்நானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. **அவர்கள் சத்தியத்தை சரியாக அறிந்து** கொண்ட பிறகு இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வசனம் கூறுகிறது. அங்கே. **மீண்டும்** ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வேதவசனம் குறிப்பிடவில்லை என்பதைக் கவனியுங்கள். ஏனெனில். முதலில் பெற்ற ஞானஸ்நானத்தை தேவன் அங்கீகரிக்கவில்லை.

ஆகையால். உண்மையில் விசுவாசத்தைக் கொண்டு தேவ கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால். உண்மையான விசுவாசத்திற்கு தேவையான கீழ்ப்படிதலும் அங்கே இல்லாமலில்லை' என்றாள் ரேச்சல்.

"இதன் பொருள். எபேசியரில் உள்ள வசனம். அப்போஸ்தலரில் உள்ள வழிமுறைகளுக்கு முரண்படவில்லை" என்றான் ஆண்ட்ரு. **"கிருபை, விசுவாசம், கீழ்ப்படிதல்"** ஆகிய எல்லாம் சேர்ந்து கிரியை நடப்பித்து அதன் பயனால் இரட்சிப்பு கிடைக்கிறது. ஆகவே. ஒரு வசனத்தை ஏற்றுக் கொள்வதற்கு. இன்னொரு வசனத்தை விடத் தேவையில்லை. நாம் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு. பின்பற்றலாம்".

"இந்த உபதேச சட்டத்தை நாம் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டும். ஆண்ட்ரு" என்றாள் ரேச்சல் "தேவ வசனங்கள் ஒன்றைக் குறித்து என்ன சொல்லியிருந்தாலும். மற்ற

வசனங்கள் கண்டிப்பாக அதோடு ஒத்துப்போக வேண்டும்'' அப்படி ஒத்துப்போகவில்லையெனில் தேவனுடைய வார்த்தை எப்போதும் தவறாகாததால் நம்முடைய புரிந்து கொள்ளுதலில் ஏதோ தவறு நடந்திருக்கிறதென்று அறிந்து கொள்ளலாம்''

"அருமையான யோசனை"! என்றான் ஆண்ட்ரூ. **"இப்பொழுது சபை முக்கியமல்ல வென்றும், இரட்சிப்பைப் பெறுவதென்பது வேறு, சபையில் அங்கமாவது வேறு என்றும் சொல்லும் சில பிரசங்கிகளின் கருத்து பற்றி என்ன நினைக்கிறாய்?**

"நன்று, திரும்ப நமக்குப் பிடித்த மான அதிகாரத்திற்கு செல்வோம்'' என்று ரேச்சல் சிரித்தாள். ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்திருப்பாரென்றால் - சபை - அதாவது தேவனுடைய குடும்பம் உலகத்திலே அவருக்கு மிகவும் முக்கியமானதென்று நான் தீர்மானிப்பேன்".

"ஆகையால் அப்போஸ்தலர் 2-ல் உள்ளபடி ஒருவன் விசுவாசம், கீழ்ப் படிதல், என்ற மாதிரியைப் பின்பற்று வானென்றால் அவனைக் தேவன் கண்டிப்பாக அந்த ஒரே சபையில் சேர்ப்பார்'' என்று பதிலளித்து முடித்தான். ஆண்ட்ரூ. "ஆனால், இன்றைக்கு உலகத்தில் அந்த சபை எங்குள்ளது?

"எனக்குத் தெரியாது'' என்று ஒத்துக் கொண்டாள் ரேச்சல். சபை ஆரம் பித்ததிலிருந்து அநேக ஆண்டுகள் கழிந்து விட்டபடியால், நாம் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு கொஞ்ச கொஞ்சமாக மாறிவிட்டது என எண்ணுகிறாயா?

ஒருவேளை அப்படி அந்தளவுக்கு மாறியிருக்குமானால், அது தேவனால் தன்னுடைய சபையென்று இன்றைக்கும் அடையாளம் காண முடியுமா? என்றான் ஆண்ட்ரூ. "இன்றைக்கு நிறைய பிரிவினைச் சபைகள் உண்டு. ஆனால், இதுவரைக்கும் அவைகளின் பெயர் களையோ அல்லது அவர்களின் வழிபாட்டு வழிமுறைகளையோ நாம் வேதாகமத்தில் படிக்கவில்லை. நாம் தொடர்ந்து படிக்கும்போது, இவைகளை மனதில் கொள்ள வேண்டும், உதாரண மாக, பாப்திஸ்து பிரசங்கியார், பாப்திஸ்துகள் யோவானைப் பின்பற்று கிறவர்கள் என்று நம்முடன் சொல்லி யிருந்தாலும், வேதாகமத்தில் பாப்தி ஸ்துகள் என்றோ பாப்திஸ்து சபை யென்றோ நாம் எங்குமே படிக்கவில்லை''

**ஆகையால், நாம் தேவனுடைய பெயரையோ அல்லது கிறிஸ்துவினுடைய பெயரையோ கொண்டிருக்கிற ஒரு சபையைக் கண்டுபிடிப்பது அவசியம்'' என்று யோசனை சொன்னாள் ரேச்சல்.**

ஆனால் இப்பொழுது அதைப் போலொத்த ஒரு சபை இவ்வுலகில் இல்லாமலும் இருக்கலாம்"! என்றான் ஆண்ட்ரூ'' அப்படியொரு சபை இப்பட்டணத்தில் இருந்தால் கண்டிப்பாக அது நமக்குத் தெரிந்திருக்கும். 'ஆகவே, இப்பொழுது நாம் என்ன செய்யலாம்? நாம் சரியான முறையில், ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால் தேவன் நம்மை அந்த ஆதி சபையிலே சேர்ப்பாரா?''

அப் 2-ல் அது வாக்குத்தத்தமாக உள்ளதால், அவர் அப்படிச் சேர்ப்பார் என

நான் நம்புகிறேன்'' என்றாள் ரேச்சல்'' -ஆனால். எப்படி நாம் ஆராதிப்பது? பாப்திஸ்துகளுடனா அல்லது கத்தோலிக்கருடனா? யாருடன்? இவர்களுடைய ஆராதனையின் மாதிரிகள். நாம் படித்த ஆதிச் சபையின் மாதிரியுடன் ஒத்துவரவில்லை. அவர்களுடன் சேர்ந்து ஆராதித்தால். சத்தியத்தின்படி நாம் சரியானவர்களாக இருக்க முடியுமா?

கத்தோலிக்கர்களின் குழந்தை ஞானஸ்நானத்துடன் என்னால் எப்படி ஒத்துப்போக முடியவில்லையோ அல்லது விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்ற பாப்திஸ்துகளின் கொள்கைகளோடு எப்படி முடியவில்லையோ அதைப் போலவே இப்படிச் செய்வதும் சரியென்று எனக்குத் தெரியவில்லை. ஒருவருடைய கொள்கை வேதத்திற்கு முரண் படுமானால். அவர்களுடன் ஐக்கியம் வைப்பது. அவர்கள் செய்வதை ஆதரிப்பது போலாகிவிடும் என எண்ணுகிறேன்'' என்று திட சிந்தனையோடு வாதிட்டான் ஆண்ட்ரூ. நாம். வசனங்களில் படித்த மாதிரியின்படி ஒரு சபையைக் கண்டுபிடிக்குமளவும் நாம் நம்மளவில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நாம் படித்த மாதிரியின்படி அவரை ஆராதித்து. நம்மால் முடிந்தளவு அவருக்காக வேலை செய்வதுதான் சரி என நினைக்கிறேன்.

''அப்படிச் செய்வது. நம்மை குடும்பத்திடமிருந்தும். நண்பர்களிடமிருந்தும் பிரித்துவிடாதா?'' என்றாள் ரேச்சல்.

''ஆண்ட்ரூ. ரேச்சலைப் பார்த்து''. நாம் வேதத்தைப் படிப்பது. ஒருவேளை சவுல் தனது வாழ்க்கையில் எடுத்த முடிவைப் போல நாமும் எடுக்க வழிநடத்தக்கூடும் என்று உன்னிடம் சொன்னது உனக்கு நினைவிருக்கிறதா? சவுல் தான் மிகவும் வைராக்கியம் காட்டின யூதமத விசுவாசத்தை விட்டு விட வேண்டியதாயிருந்தது'' என்று ஞாபகப் படுத்தினான்.

''ஆம்'' என்றாள் ரேச்சல் இவைகள் உண்மையாக இருந்தால். நாம் என்ன செய்ய வேண்டும்? வேதாகமத்தைச் சரியாகப் படித்து. துல்லியமாகப் புரிந்து. அதில் உள்ளபடியே அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று நாம் ஆரம்பத்திலேயே ஒப்புக் கொண்டோம்''.

நாம் அப்படிச் செய்வதின் மூலம். சவுலின் வாழ்க்கையில் நேர்ந்தது போல நாம் ஒதுக்கப்படலாம் - துன்புறுத்தப்படலாம். நாம் என்ன செய்கிறோம் என்பது சிலருக்குப் புரியாமல் போகலாம். ஆனால் இது தான் சரி என்று நாம் புரிந்து கொண்டபடியால். நம்முடைய குடும்பத்தாருக்கும். நண்பர்களுக்கும் இது குறித்து விளக்க வேண்டும். ஒரு வேளை அவர்களையும். இது தான் சரி என்று ஒப்புக் கொள்ளச் செய்யலாம். அவர்களும் புதிய ஏற்பாட்டின் மாதிரிக்கு தங்களைக் கீழ்ப்படுத்த முன்வரலாம். தேவன் தன்னுடைய தேவ வசனங்களில் வெளிப்படுத்தியுள்ளதை. நாம் உண்மையாகவும். கவனமாகவும் பின்பற்றினால் என்ன நடக்குமென்று யாருக்குத் தெரியும்?.

.....(தொடரும்)

**B.B.சோட்** **R.R.நாயகம்**

# திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை திங்களிதழ் விதிப் படிவம்

## Form - IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கேயம் – 638 701. |
| அச்சிடுவோர் பெயரும் முகவரியும் | : | கோனார் பிரிண்டர்ஸ்<br>35/4F APKரோடு<br>மதுரை – 625 012. |
| வெளியிடுவோர் பெயர் | : | கிறிஸ்துவின் சபை<br>காங்கயம். |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கேயம் – 638 701 |
| ஆசிரியர் பெயர் | : | S. ராஜநாயகம் |
| இந்திய குடிமகனா | : | ஆம். |
| முகவரி | : | 195,தாராபுரம் ரோடு,<br>காங்கயம் 638 701 |
| இதழுக்குரியவர் பெயரும் முகவரியும் | : | கிறிஸ்துவின் சபை<br>தாராபுரம் ரோடு,<br>காங்கயம் – 638 701. |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு,<br>காங்கயம் – 638 701. |

ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும். உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

காங்கயம்
ஏப்ரல், 1998

(ஒப்பம்)
S.ராஜநாயகம்.

தெரிந்து கொள்ளுங்கள்

# இரண்டு உடன்படிக்கைகள்

## பாடம் - 1

### முன்னுரை

**I நோக்கம் :** இரண்டு வேறுபட்ட காலகட்டங்களில், தேவன் தன்னுடைய மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட இரண்டு ஏற்பாடுகளுக்கான உறவு பற்றி படிப்பது. பழைய ஏற்பாட்டின் நோக்கம் பற்றியும், அது முடிந்து போவது பற்றியும் தெரிந்து கொள்வது. பிறகு புதிய ஏற்பாடு நிலை நிறுத்தப்படுதலைக் கவனிப்பது.

**II விளக்கம்:** உடன்படிக்கை: இரண்டு அல்லது அதற்கு அதிகமானவர்களால் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம். இது ஒன்றைச் செய்யலாம் என்றும் அல்லது செய்யக் கூடாது என்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கட்டுப்படுத்தும். உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ளபடி செய்தால், நன்மை வாக்களிக்கப்பட்டிருக்கும்.

**III உண்மைகள்:** பழைய ஏற்பாடு: தேவனுக்கும், ஒரு தேசத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம்.

புதிய ஏற்பாடு: தேவனுக்கும், எல்லா மனிதருக்கும் இடையே செய்யப்பட்டிருக்கிற ஒரு ஒப்பந்தம்.

1. ஒரு ஒப்பந்தம் நிபந்தனையுடனிருக்கலாம்: தேவனுக்கும்-இஸ்ரவேலருக்கும் (யாத் 19:5-18)
2. ஒரு ஒப்பந்தம் நிபந்தனையற்றதாகவும் இருக்கலாம் தேவனுக்கும், ஆபிரகாமுக்கும் (ஆதி 19:5-18)

### விவாதம்

**I பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை**

A. தேவனுக்கும்-இஸ்ரவேலருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது (யாத் 19:1-5), இஸ்ரவேலர் எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு வரவழைக்கப்பட்டபோது.

B. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேச சட்டம் (யாத் 20:1-2,31:12-17,34:27-28)

C. கிறிஸ்துவாகிய "சந்ததி" வருமளவும், குறிப்பிட்ட காலம் வரை நீடித்திருக்கும்படியாக கொடுக்கப்பட்டது. (கலா 3:16, 3:19)

D. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால், "நியாயப் பிரமாணம்" என்று அழைக்கப்பட்டு, பேசப்பட்டுள்ளது.

1. ரோம 1:17யும் ஆபகூக் 2:4-யும் ஒப்பிடுக.
2. மத் 22:35-39யும். உபா 6:5. லேவி 19:18 ஒப்பிடவும்
3. யோவான் 10:34-ல் இயேசுவும் "வேதம்" என்று குறிப்பிட்டுள்ளார்.
4. அப். பவுல் I கொரி. 14:21-ல் ஏசாயா 28:11-12 வசனங்களை மேற்கோள் காட்டுகிறார்.

## II பத்து கட்டளைகள்

A. சனிக்கிழமைகளில் கூடிவந்து. இன்றைக்கு ஓய்வு நாளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பொய்யாய் சொல்கிறவர்கள் பற்றி கவனிக்கப்பட வேண்டியவை.

**1. அவர்கள் நியாயப்பிரமாணத்தை இரண்டாகப் பிரிக்கிறார்கள்.**
**a) ஒழுக்க ரீதியானவை b) சடங்காச்சாரரீதியானவை**

**2. ஒழுக்க ரீதியானவை தேவனால் கொடுக்கப்பட்டவை, அவை நீக்கப்பட வில்லையென்று சொல்கிறார்கள்.**

**3. சடங்காச்சாரமானவை மோசேயினால் கொடுக்கப்பட்டவையென்றும், அவை எடுத்துப் போடப்பட்ட தென்றும் சொல்கிறார்கள்.**

**4. இவைகள் தவறான எண்ணங்கள்.**

B. இப்படிப்பட்ட நம்பிக்கைகளில் உள்ள பிரச்சினையென்னவென்றால்: வேதாகம எழுத்தாளர்கள் இப்படி பிரிவினை ஏற்படுத்தவில்லை.

**1. தேவனுடைய பிரமாணங்களை மோசே பேசினான் (நெகே 10:29,8:14)**

**2. "மோசேயின் பிரமாணங்களை" தேவன் கொடுத்தார் (நெகே 8:1, எஸ்றா 7:6)**

**3. தேவனுடைய பிரமாணம், மோசேயின் பிரமாணம் ஆகிய பிரமாணங்கள் எல்லாம் ஒரே இடத்திலிருந்து தான் வந்தது. அவைகள், ஒன்றுக்கு மாற்றாக மற்றொன்று இருக்க முடியும். (நெகே 8:1-8)**

C. தேவன் "பத்து கட்டளைளை" "உடன்படிக்கை" என்று கூறுகிறார். யாத் 34:27-28 உபா 4:13. 9:9-11. I ராஜா 8:9.21. ஆகையால். உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு. எடுத்துப்போடபபட்டிருக்குமானால். பத்துக்கட்டளைகளும் கூட முடிந்து போய்விட்டன.

D. **உதாரணம்:** நமது இந்திய தேசம் பிரிட்டிஷ் காலனியாக இருந்தபோது. இங்கிலாந்து நாட்டிற்கும். அதன் சட்டங்களுக்கும் கீழாக இருந்தது. ஆனால். சுதந்திரம் அடைந்த பிறகு. சட்டங்கள் எழுதப்பட்டபின். நாம் இங்கிலாந்து நாட்டுச் சட்டங்களுக்கு கீழானவர்கள் அல்ல. நமது. தேச சட்டங்களில். பெரும்பாலானவை. இங்கிலாந்து தேச சட்டங்களில் உள்ளவையாக இருந்தாலும்கூட. இது தான் உண்மை.

## III *பழைய உடன்படிக்கை முடிந்து போதல்*

A. எரேமியா. 31:31-34 புது உடன்படிக்கை வருவதை முன்னுரைக்கிறது "இதற்குள்ளாக-இருக்கிற எல்லோரும் அவரை அறிவார்கள்" என்றும் "இனி பாவங்கள் நினைக்கப்படுவதில்லையென்றும்" கூறப்பட்டுள்ளதை அறிகிறோம்.

B. எபி. 8:6-13 வசனப்பகுதி எரேமியா 31:31-34-ன் நிறைவேறுதலாக வும். கிறிஸ்துவின் போதனைகள் "புதியதாக" இருக்கும் என்பதையும் காட்டுகிறது.

C. ஆனால், முதலாவது உடன்படிக்கையாகிய நியாயப் பிரமாணத்தை, குறிப்பாக யார் எடுத்துப்போட்டது?

1. மத் 5:17-ல் முதலாவது உடன்படிக்கையை தான் நிறைவேற்றிவிட்டதாக கிறிஸ்து கூறியுள்ளார். (யோவா 19:28)
2. எபே 2:14-16-ல் இயேசு மரித்தபோது இதைச் செய்ததாக பவுல் கூறியுள்ளார்.
3. எபி 7:12, 9:15-17ன் படி புதியதாகிய, இரண்டாம் உடன்படிக்கை, அதை உண்டு பண்ணினவர் மரணமடையுமட்டும் நடைமுறைக்கு வர முடிய ாது.
4. இரண்டு உடன்படிக்கைகளுக்கு கீழாக நாம் வாழ முடியாது. எபி 10:9 - வாசிக்கவும்
5. கற்பலகைகளில் எழுதப்பட்ட பிரமாணம் " ஒழிந்து போனது" II கொரி 3:6-17.

## IV புதிய உடன்படிக்கை – கிறிஸ்துவின் சுவிசேஷம்

**A. இயேசுவுக்கு தேவனால் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது (மத் 17:5)**

**B. தனக்கு எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளதாக இயேசு உறுதி செய்கிறார் (மத் 28:18 யோவா 17:2)**

C. **இயேசுவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக பவுல் போதித்தார்** (I கொரி 15:24-28) எபே 1:20, 22,கொலோ 1:18)

D. **ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தின் நிறைவேறுதலாக இயேசு இருந்தார். (கலா 3:6–29), அதன் கீழாக, கீழ்ப்படிகிற யாவரும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறார்கள்** (II கொரி 5:17)

## V. புதிய உடன்படிக்கையின் நோக்கம் – கிறிஸ்துவின் சுவிசேஷம்

A. **மத் 28:19– "சகல ஜாதிகளுக்கும்" உபதேசம் பண்ணுங்கள்**

B. **மாற் 16:15– "நீங்கள் உலகமெங்கும் போய்** சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் **பிரசங்கியுங்கள்"**

C. **லூக் 24:46–49– ".........மனந்திரும்புதலும்,** பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் – பிரசங்கிக்கப்படவும் வேண்டியது"

## முடிவுரை

1. புதிய பிரமாணத்தில் (பழைய பிரமாணத்தில்ல) பாவி தேவனண்டை வர முடியும் **(ஏப்பபடி? கிறிஸ்துவின் இரத்தம்)**
2. கலா **5:4,** "நியாயப் பிரமாணத்தினால் நீதிமானாக விரும்புகிறவன் கிருபையினின்று விழுகிறான்."
3. பழைய உடன்படிக்கையில் அல்ல, புதியதில்தான் பாவ மன்னிப்புக்கான நிபந்தனைகளைக் காண முடியும்.
4. புதியதில் தான் ஐக்கியத்திற்கான நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. (Iயோவா 1:4)

5. புதிய ஏற்பாட்டில் தான், நமக்கான தேவனுடைய வாக்குத்தங்களும், எப்படி நித்தியகாலமாக வாழ்வது என்பது பற்றியும் உள்ளது.

Toney L. Smith

EZSR

# நீ உன் கடமையைச் செய்கிறாயா?

"....ஒவ்வொரு நாளின் கட்டளைப்படியே" வித்தியாசமான வேலைகளைச் செய்வதற்கு. ஆட்கள் ஏற்படுத்த வேண்டுவதின் முக்கியத்துவத்தை சாலமோன் ராஜா உணர்ந்திருந்தான் (II நாளா 8:14)

தேவ மகிமையை அதிகரிக்கச் செய்வதாகவே எல்லாக் கடமைகளும். உள்ளது "ஆகையால், நீங்கள் புசித்தாலும். குடித்தாலும். எதைச் செய்தாலும். எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்று Iகொரி. 10:31-ல் வாசிக்கிறோம். ஆகையால். தேவனுடைய மகிமைக்கு விரோதமாக ஒருவனுடைய காரியங்கள் இருந்துவிடக் கூடாது.

உங்களுடைய இரட்சகரும். என் இரட்சகருமாகிய இயேசு. " அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு. நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர். செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்" (லூக் 17:10) நம்முடைய கடமையைச் செய்வதற்கு நாம் விசேஷித்த துதிகளை எதிர்பார்க்கக் கூடாது.

கடமையானது.. நாம் செய்ய வேண்டியவைகளை உணர்த்துகிறது. மனிதனுடைய மனது இந்த விதமாகத்தான் அமைக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள ஒரு காரியம் சரிதான் என்ற அபிப்பிராயம் வந்த மாத்திரத்திலேயே. அந்தக் காரியத்தைச் செய்வதற்கு. நமக்கு சில பொறுப்புகள் உண்டென்பதை அங்கீகரிக்கிறோம்.

ஒருவனுடைய குறிப்பிட்ட உறவுகளினடிப்படையில். அவனுடைய கடமைகளை நாம் பகுக்க முடியும். நம்முடைய கடமைகளோடு சம்பந்தப்பட்ட சில உறவுகளை நாம் இங்கே பார்ப்போம்.

1. உனக்காக நீ செய்ய வேண்டிய கடமையுண்டு. உனக்கு நீ உண்மையாக இருக்கிறாயா? உன்னால் செய்ய முடிந்த மிகச் சிறந்ததைச் செய்கிறாயா? நீ உண்மையாகவே செய்ய விரும்பினால். அதைச் சிறப்பாகச் செய்ய முடியுமா? உன்னை அழிக்கக்கூடிய செயல்களையும். பழக்க வழக்கங்களையும் நீ செய்கிறாயா?

குடிப்பழக்கம். விபச்சாரம். திருட்டு. போதைப் பொருள் உபயோகித்தல் போன்றவை ஒருவனுடைய சுய அழிவுக்கு வழி செய்கிறது. "செய்யாதிருப்பாயாக"

என்று பரிசுத்த எழுத்துக்களில் சொல்லப்பட்டவை. மனிதனின் நன்மைக்காக மீண்டும் எழுதித்தரப்பட்டுள்ளது (யாத் 20:1: ரோம 13:9-11)

2. உன் குடும்பத்திற்காக செய்ய வேண்டிய கடமையுண்டு "இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (மத் 19:5. மாற்கு 10:6-7) நாம் ஒத்துக்கொள்கிறோமா இல்லையா தெரியாது. ஆனால். எல்லா மனித சமுதாயத்துக்கும் குடும்பம்தான் பெரிய அஸ்திபாரமாக உள்ளது. இன்றைக்கு குடும்ப அமைப்பு. தெய்வ பயமற்ற. மனிதக் கோட்பாடுகள் நிறைந்த மக்களாலே ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது: தகப்பனோ. தாயோ இல்லாமலிருக்கிற ஆயிரக்கணக்கான பிள்ளைகளைக் கொஞ்சம் பாருங்கள். முடிவு என்ன? அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். திருடுகிறார்கள், கொலைக்காரர்களாகிறார்கள். சிறுவயதில் குழந்தை பெற்றுக் கொள்ளுகிறவர்களாகவும். சட்டத்தைப் புறக்கணிக்கிறவர்களாகவும். இன்னும் உலகத்தின் பிடியில் முழுமையாகச் சிக்கினவர்களாகவும் உள்ளனர். பெற்றோர்களே. நீங்கள் அடிப்படையான காரியங்களுக்குத் திரும்பப் போக வேண்டிய நேரம் வந்து விட்டது (நீதி 13:24.19:18:22:6.15: 23:13-14:29:15-17)எபே.6:1-4: கொலோ 3:20-21

பிள்ளைகள் நேசிக்கப்பட்டு. கர்த்தருடைய வளர்ப்பிலும். சிட்சையிலும் வளர்க்கப்பட வேண்டும் (நீதி 22:6. எபே 6:1-4). உதாரணமாக. இயேசு ஒரு தச்சு வேலைக்காரனாகும்படியாக வளர்க்கப்பட்டார். பவுல். ஒரு கூடாரத் தொழில் செய்கிறவராக வளர்க்கப்பட்டார் (மத் 13:55.மாற் 6:3.அப் 18:7).ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்கும்படியாக அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சோம்பேறித்தனம் ஒரு சாபமாகும்."சோம்பேறியின் மூளை பிசாசின் கேந்திரக்கிடங்கு"

3. நீ உன் தேசத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையுண்டு. நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ் சரி. தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும், நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலும் சரி. கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது...: எல்லாரையும் கனம் பண்ணுங்கள்: சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்: தேவனுக்குப் பயந்திருங்கள்: ராஜாவைக் கனம் பண்ணுங்கள்" (I பேதுரு 2: 13-17)

ஒரு தேசத்தை அழிப்பதற்கான சுலபமான வழி அத்தேசத்தின் தலைவர்கள் மீது ஜனங்களுக்கிருக்கும் நம்பிக்கையை அழிப்பதாகும். அப்பொழுது

குற்றங்கள் அரிபிளவையைப் போல் வேகமாகப் பெருகி ஒழுக்க கோட்பாடுகளை விழுங்கிவிடும். தேவனுடைய ஆளுகை தள்ளப்பட்டு விட்டால். எந்தக் குற்றமும் தவறாகத் தெரியாது. நியாயாதிபதிகளின் காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது. இங்கே. கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.''அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை: ஒவ்வொருவனும் தன் பார்வைக்கு நலமானபடி செய்தான்''(நியா 17:6.18:11.19:1.21:25. உபா 12:8) எப்படியோ. சகல அதிகாரமும் உள்ள ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம். மக்களுடைய மனதில் இல்லாமல் போய்விட்டது (மத் 28:18-20.கொலோ 3:16.17) இன்றைக்கு. தேவன். தன்னுடைய வசனத்தின் மூலம் ஆளுகை செய்கிறார். (ரோமா 1:16. அப் 2:36-38.47).

4. ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் நீ ஆராதனைக்கென்று கூடி வருகின்ற பிராந்திய சபைக்கு நீ செய்ய வேண்டிய கடமையுண்டு. (ரோம 6:16. எபி 10:24-25: அப் 20:7. 2:36-38,42.47) புதிய ஏற்பாட்டு மாதிரி அங்கே கொடுக்கப்பட்டுள்ளது. (I தீமோ 4:12. Iபேது 2:21) புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்தார்கள் (அப். 20:7) தங்கள் வருமானத்திலிருந்து கொடுத்தார்கள் (I கொரி 16:1-2) கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றார்கள் (2:42) கர்த்தரின் நாமத்தைத் துதித்துப் பாடி, ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டார்கள் (எபே 5:19. கொலோ 3:16.யாக் 5:13) தேவனுடைய வார்த்தையை வாசித்துப். படித்தார்கள் (அப் 2:42. Iகொரி 7:17:14-37) ஜெபித்தார்கள் (அப் 2:42. Iதீ மோ 2:1.I பேது 3:7.12: வெளி 5:8) ஒரு ஆராதனை வசனங்களின் படியாக இருக்க வேண்டுமானால். இந்த ஐந்து காரியங்களும் இருக்க வேண்டும் சகோதரர்களே. உங்கள் சமுதாயத்திலிருக்கிற சபையை நீங்கள் தாங்காவிட்டால். வேறு யார் இதைச் செய்வார்கள்?

5. நீங்கள் சர்வ வல்லமையுள்ள தேவனுக்குச் செய்யும் கடமைகளில் உங்கள் அயலகத்தாரும் சேர்க்கப்பட வேண்டும். நாம் பிறனில் அன்பு கூரவேண்டும். (மத் 22:37-40) மாற் 12:28-33) உங்கள் அயலகத்தாருக்கு நீங்கள் செய்ய வேண்டியவைகள் உண்டு. அவர்கள் நிமித்தம். பக்தி ரீதியிலான ஒரு சிறந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்துங்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்களுக்குப் போதியுங்கள் (II தீமோ 2:2) நீங்கள் இருக்கின்ற நிலையிலே கர்த்தருக்காக வேலையை ஆரம்பியுங்கள். பணிபுரிகின்ற இடங்களிலோ. படிக்கும் இடங்களிலோ, மருத்துவமனைகளிலோ அதைச் செய்யுங்கள்.

ஒருவேளை. நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள்.''என்னுடைய நண்பனுக்கு போதிக்கின்ற அளவுக்கு வேதாகமம் எனக்குத் தெரியாது என்று'' நீங்கள் கிறிஸ்தவர்களாவதற்கு என்ன செய்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால். உங்கள் நண்பனுக்கு போதிக்கின்ற அளவுக்கு உங்களுக்குத் தெரிந்திருக்கிறது என்று நாம் சொல்ல முடியும். உங்கள் வேதாகமத்தை திறவுங்கள். மத். 28:18-25; மாற்கு 16:15-16. லூக் 24:46-47. அப் 2:36-38. இந்த வசனப் பகுதிகளை மனப்பாடம் செய்து. உங்கள் நண்பனுக்கு அவைகளைப் போதியுங்கள்.

உங்கள் நண்பனின் இரத்தப்பழியை உங்கள் கையிலேந்திக் கொண்டு. அந்த மகா நியாயத் தீர்ப்புக்கு போக விரும்புகிறீர்களா? பவுல் இவ்விதம் கூறுகிறார். "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல். எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே. எல்லாருடைய இரத்தப்பழிக்கும். நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சியாக வைக்கிறேன்" (அப் 20:26.27)

சுத்தமானவைகளையும். மாசில்லாத இருதயத்தையும் உடையவர்களா யிருப்பதற்கு. தேவனுக்கு முன்பாக உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். தேவனைச் சந்திக்க ஆயத்தப்படும்படி. விரும்புகிறவர்களுக்காக. இந்த வசனங்கள் எழுதப்பட்டுள்ளது. (ஆமோ 4:12) **– W.A. ஹேரலி**


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. **15/-**

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
**தபால் பெட்டி எண் 28, காங்கயம் - 638 701.**

*குறிப்பு : தயவு செய்து மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

வாலிபர் பகுதி

# ஆறுதலின் மகனென்று அழைக்கப்பட்டவன்

வருடத்தில் ஒரு முறை வசந்த காலம் வருவது போல். வாழ்க்கையில் ஒருமுறையே வரும் வளமான வாலிபப்பருவத்தில் இருக்கும் வாசகர்களுக்கு விண்ணவராம் இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். ஆறுதலுக்காய். அடைக்கலம் தேடி அங்கும் இங்கும் ஆலாய்ப் பறக்கும் அருமையான வாலிப அன்பர்களே. தகப்பனும் தாயும் தன்னை தனியேவிட்டார்கள் என தவிக்கும் நாட்களிது. இப் பருவத்தை அடைந்த வாலிப பிள்ளையை பார்த்து. ஆறுதலின் மகனென்ற அடைமொழியோடு தானும். அடுத்தவரும் அழைக்ககூடிய தகுதியை பெற்றவனாய் திகழவேண்டும் என்பதே பெற்றோரின் அளவில்லா ஆசை.

வாய்மொழியால் வானத்தையும் பூமியையும் படைத்த தேவனிடமிருந்து விசேஷித்த விவேக வரத்தை பெற்ற சாலொமோன். வற்றாது கரை புரண்டு ஓடும் அறிவு நதியாம் நீதிமொழிகளில் கூறுகையில் "உன் மகனை சிட்சைசெய் அவன் உனக்கு ஆறுதல் செய்வான். உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" என்கிறார் (நீதி 29:17) ஆகவே வாலிபர்களாகிய நாம் தவறான பாதையில் தடுமாறி விழும்போது தனியாத அன்பினால் நம்மை திருத்தும் எண்ணத்துடன் சிட்சிக்கின்ற அல்லது தண்டிக்கின்ற பெற்றோர்களை புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில். நாம் சமாதான குலைச்சல் செய்கிறவர்களாய் இராமல் பிறருக்கு நம் சொல்லிலும். செயலிலும் ஆறுதல் அளிப்போர்களாய். மனுக்குல மைந்தன் கலிலேய மலையில் பாக்கிய வசனங்களை மொழியும் போது. சொன்னது போல் (மத் 5:9) திகழ்ந்தால் அண்டசராசரங்களை ஆளும் அநாதிதேவனின் அன்பு புத்திரர்களாவோம். அது மாத்திரமல்ல பிள்ளைகளாகிய நாம் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படிவது நியாயம் என கர்த்தருடைய குறைவற்ற வேதம் நமக்கு கட்டளையிடுகிறது (எபே 6:1) இப்படிப்பட்ட குணாதிசயங்களை உடையவனாய் இருந்ததால் ஆறுதலின் மகனென்று அப்போஸ்தலர்களால் அழைக்கப்பட்ட பர்னபா இம்முறை நமக்கு எடுத்துக்காட்டாக நிற்கிறான். அவனைப் பற்றி சற்று ஆராய்வோம் வாருங்கள்.

## *ஆதித் திருச்சபைக்கு பொருளாதார உதவி செய்து ஆறுதல் அளித்தவன்*

கிறிஸ்துவின் மாசற்ற குருதி கொல்கதா குன்றில் மனிதகுலத்துக்கு

விமோச்சனம் உண்டாக்குவதற்கென்று சிந்தப்பட்ட பின் உயிரற்ற இயேசுவின் சடலத்தை கல்லறையில் கவலையோடு வைத்தார்கள். வைத்த மூன்றாம் நாளிலே வல்லமையோடு சொல் தவறாது எழுந்திருந்தார். எழுந்த நாளிலிருந்து ஏறக்குறை ஐம்பதாம் நாளில் (பெந்தேகோஸ்தே நாளில்) திருக்குமாரனின் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. யூத மதத் தலைவர்களின் இன்னல்கள் ஒருபக்கம். ரோம பேரரசின் அடக்குமுறை மறுபக்கம். புதிதாய் பிறந்த பச்சிளங் குழந்தையான திருச்சபைக்கு இருபக்கமும் இடிகள். ஓய்வுநாளில் தேவாலயத்திற்கும். ஜெபாலயத்திற்கும் கூடி வந்த யூதர்களுக்கு மார்க்கமாற்றத்திற்கு பின் வாரத்தின் முதல்நாளில் சபையாக கூடுவதற்கு இடையூறுகள். யூத சமுதாயத்தின் சீற்றத்தால் ஒடுக்கப்பட்டடோர்களானார்கள். கிறிஸ்தவர்கள்.

கிறிஸ்துவை நம்பி. தனக்கு உண்டானவைகளையெல்லாம். பொதுவிலே வைத்து. புத்துணர்ச்சியுடன். புது பொலிவு பெற்று சபையை சீராட்டி. பாராட்டி வளர்த்து வந்தார்கள் ஆதி சீஷர்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாக நற்குணசாலியாக நம்மவன் பர்னபா திகழ்கிறான் (அப் 4:36.37) இவன் ஒரு லேவியனாய் இருந்திருக்கிறான். லேவியர்களை தேவன் தனக்கென்று ஆசாரியர்களாய் இருக்கும்படி பிரித்து எடுத்தார் (எண் 3:10)

லேவியர்களுக்கென்று பரிசுத்த நிலத்தில் பங்கொன்றுமில்லை (எண் 18:10) எப்படி பர்னபாவுக்கு நிலம் இருந்திருக்கும் என்ற கேள்வி எழுவது நியாயம் தான். ஆனால் அவன் சொந்த ஊர் சீப்புரு தீவு என்று வேதாகமம் சொல்லுகிறது (அப் 4:36) லேவியர்களுக்கு பரிசுத்த நிலத்தில் தான் பங்கு இல்லையே தவிர வேறு இடத்தில் நிலம் இருப்பதில் தவறு ஏதுமில்லை. சொந்த நிலத்தை விற்று பிறருக்கு கொடுப்பதை நம்மால் கனவிலாவது எண்ண முடிகிறதா? கர்த்தரின் சபையின் மீது அளவில்லா அன்பு கொண்டதால் காணி நிலத்தையும் கர்த்தருக்கென்று கருணை கொண்டு கொடுத்துவிட்டான். யாரும் அவனை கட்டாயப்படுத்தியதாக தெரியவில்லை. அப்போஸ்தலர்களும் இப்படி கட்டளை பிறப்பித்ததாக தெரியவில்லை. அப்படி செய்தால் "அவனவன் விசனமாயுமல்ல. கட்டாயமாயுமல்ல. தன் மனதில் நியமித்தபடியே கொடுக்ககடவன்...."(II கொரி 9:7)என்கிற கட்டளையை மீறியிருப்பார்களே.

சேபாவின் ராஜஸ்திரியின் விடுகதையை தவிடு பொடியாக்கிய ஞானி சாலொமோன் கூறுகையில். "கருணைக் கண்ணன் ஆசிர்வதிக்கப்படுவான்....." (நீதி. 22:9) என்கிறார். பர்னபாவும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பான்

என்பதில் எந்த ஐயமுமில்லை. உண்மையாகவே இவன் அப்போஸ்தலர்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்திருப்பான்.

## ஊழியத்தில் செய்த உதவியால் ஆறுதல் அளித்தவன்

உயிர்த்தெழுந்த இயேசு வானுலகு போகும்போது 'உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்' என்று வாய்மொழிந்து சென்றார் (மாற் 16:16). கர்த்தரின் பெரிதான கட்டளையைப் பெற்ற அப்போஸ்தலர்கள் அடிபிசகாமல் அனுதினமும் அதை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயல்பட்டார்கள்.

சபைகளை பாழாக்குவதில் பெயர்பெற்ற சவுல் தமஸ்குவின் சாலையில் சாவை வென்றவரை சந்தித்த பின்பு மனமாற்றம் அடைந்தான். அப்படிப்பட்டவனை தைரியமாய் அப்போஸ்தலர்களிடம் அறிமுகம் செய்து வைத்தான் பர்னபா (அப். 9:27) அந்தியோகியா சபையின் மீது அளவற்ற பிரியம் கொண்ட அப்போஸ்தலர்கள் பர்னபாவை அங்கே அனுப்பி வைத்தார்கள். பர்னபாவின் விசுவாசத்தில் எத்தனை நம்பிக்கை இருந்திருக்குமானால் ஒரு சபையை பொறுப்பாய் கவனிப்பதற்கு இவனை அனுப்பியிருப்பார்கள் (அப் 11:22)

பர்னபா பிரசங்கித்த சபைக்கென்ற தனிச்சிறப்பு என்னவென்றால் முதன் முதலில் சீஷர்கள் கிறிஸ்தவர்கள் என புதுப்பெயர் பெற்றார்கள். ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம். இதன் மூலம் நிறைவேறிற்று (ஏசா 62:2. அப் 11:26) ஊழியத்தின் நிமித்தம் இவன் திருமண வாழ்க்கையை கூட தியாகம் செய்திருப்பான் என தெரிகிறது (I கொரி. 9:5.6)

எருசலேமில் உள்ள சீஷர்கள் கடும் பஞ்சத்தினால் கிலவுதியுராயன் காலத்தில் தவிக்கும்போது இவனின் மூலமாய் அந்தியோகியா சபையின் மூப்பர்கள் உதவிகரம் நீட்டி. நம்பிக்கையாய் பணத்தையும் கொடுத்தனுப்பினார்கள். பவுலோடு இணைந்து பலஇடத்தில் சபையை கட்டுவதிலும். பின்பு யோவான்மாற்குடன் சேர்ந்து கர்த்தருக்கென பணிபுரிவதிலும் மிகுந்த ஆர்வம் உடையவனாகவே காணப்பட்டான். இப்படிப்பட்ட மெச்சக்கூடிய குணமுடைய பர்னபாவை அப்போஸ்தலர்கள் **"ஆறுதலின்மகன்"** என அழைத்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.

நாமும் இப்படியே பிறரால் ஆறுதலின் மகனென்று அழைக்கப்பட இந்த வாலிப காலத்திலேயே ஆறுதலின் தேவனின் வார்த்தையை அண்டிக்கொள்வோமாக!

**ஜே. பிக்கின்ஸ்.**

# இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்?
## மத் 3:13-15;21:23-27

பேதையை ஞானியாக்கும் தேவனுடைய வேதத்தின் புதிய ஏற்பாட்டுப் பிரிவில் முதல் புத்தகமாய் அமைய பெற்றிருக்கும் மத்தேயு நற்செய்தி நூலில். இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி இப்படி எழுதுகிறார்.''அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க. நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக: இப்பொழுது இடங்கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்'' (மத் 3:13-15)

இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்? பாவம் அவரிடம் படிந்து இருந்தால் அவை மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பெற்றாரா? ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கென்று வேதாகமம் விளக்குகிறது (அப் 2:38. 22:16) இயேசு இப்படியாய் இன்மொழி கூறுகிறார். “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' (மாற் 16:16) ஆதி திருச்சபையின் முதல் பிரசங்கத்தை முழங்கிய பேதுரு. தனது முதல் நிருபத்தில் “அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது. இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது'' என்கிறார் (I பேதுரு 3:21)

வேதாகமம் இயேசுவை பற்றிக் கூறுகையில் “ அவர் பாவம் அறியாதிருந்தார்'' என்கிறது. மறுதலித்து பின்பு மனங்கசந்து அழுது மனந்திரும்பிய பேதுரு கூறுகையில். “அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை'' என்கிறார் (Iபேது 2:22) எபிரெய எழுத்தாளர் “எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும். பாவமில்லாதவராயிருந்தார்'' என்கிறார் (எபி 4:15) பாவம் அவரிடம் காணப்பட்டதால் அது மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக திருமுழுக்குப் பெற்றிருந்தால். அவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறியிருக்கிறார் என்றுதானே அர்த்தமாகிறது (Iயோ 3:4) ஆனால் இயேசு “...... பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்'' என்றார்(யோ 8:29)

நமதாண்டவர் பாவஞ்செய்திருப்பார் என்றால் அவருக்கே இரட்சகர் தேவையாயிருக்கிறது. இரட்சகர் தேவைப்படுகின்ற ஒருவர் மற்றவர்களை இரட்சிக்கும் இரட்சகராக இருக்க முடியாது.

யோவானிடம் ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? என்ற கேள்விக்கு இயேசுவே காரணத்தை தருகிறார். **"எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"** என்றார். "நிறைவேற்ற" என்கிற வார்த்தைக்கு நிரப்புதல் அல்லது முழுமைப்படுத்துதல் என்று அர்த்தம். இதே வார்த்தையை. மோசேயின் நியாயப்பிரமாணத்தை குறிப்பிட்டு பேசுகையில் அதை நிறைவேற்றவே அதில் வந்தேன் என்று பயன்படுத்தினார்.

கீழ்ப்படிதல் என்பது பற்றி எழுதுகையில் I யோ 3:7ம் வசனத்தில் யோவான் "நீதியை" என்ற வார்த்தை பயன்படுத்துகிறார் ".....நீதியைச் செய்கிறவன் நிதியுள்ளவனாயிருக்கிறான்" தேவனிடம் தன் உறவை சீராய் அல்லது நீதியாய் வைக்கிற உள்ளான குணாதிசயத்தை அது குறிக்கிறது. இயேசு இந்த தன்மையை நிறைவேற்றினாரா.. ஏசாயா தீர்க்கன் தீர்க்கமாய் கூறுகிறார். அவர் நமது ஆண்டவரின் மரணத்தை பற்றி எழுதுகையில் "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்: என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்: அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (ஏசா 53:11) என்கிறார். தமது மரணத்தை பற்றி. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில் "ஏனென்றால். நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்: நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்: எனக்கு மாத்திரமல்ல. அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோ 4:6-8) அத்தேனே பட்டனத்தில் பவுல் பிரசங்கிக்கையில் "பூலோகத்தை (இயேசு) நீதியாய் நியாயந்தீர்ப்பார்" என்றார். இதன் மூலம் ஒரு கருத்து தெளிவாய் தெரிகிறது. ஒரு நீதியுள்ள மனிதன். நீதியின் கீரிடத்தை ஒரு நீதியற்றவரிடம் பெற்றுகொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. யோவான். நமது பாவத்தை நிவிர்த்தி செய்யும் கிறிஸ்துவை பற்றி கூறுகையில் "......இயேசு கிறிஸ்து நீதிபரராயிருக்கிறார்....."(I யோ 2:1,2) என்றார். ஆகவே மனிதகுலத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்கின்ற கிருபாதாரபலிக்கு உரிய எல்லா தகுதிகயையும் பெற்றிருந்தார். இப்புவியில். நம் பரமனின் வாழ்க்கை நீதியை பிரதிபலிக்கிற ஒன்றாகவே இருந்தது.

மத் 21:23-27ல் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்பதற்கு மற்றொரு காரணமும் காணப்படுகிறது. யூதர்களால் பேணி காக்கப்பட்ட தேவ ஆலயத்தில் தேவ குமாரனாகிய இயேசு போதிக்கும் போது அவருடைய போதனைக்கு அடிப்படை அதிகாரம் எங்கிருந்து வந்தது என்கிற கேள்வியை பிரதான ஆசாரியனும். மூப்பர்களும் கேட்கிறார்கள். சாத்வீகத்தின் உறைவிடமான இயேசு இவர்களின் கேள்விக்கு பதில் தரும் பொருட்டு ஒரு கேள்வியை சாமார்த்தியமாக கேட்கிறார். "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேள்விகளைகளை தொடுத்தார் (25ம் வசனம்) இப்படி கேட்டதால் இக்கட்டான சூழ்நிலையின் உச்சியில் அவர்களை உட்கார வைத்தார். அது பரத்தில் இருந்து வந்தது என்று பதில் தெரிந்தாலும். அப்படி சொன்னால் இயேசு வைத்த கண்ணியில் சிக்கி விடுவோம் என்று எண்ணி. பதில் தெரியாதது போல் பசப்பு நாடகம் ஆடினார்கள்.

இயேசு இந்த ஸ்நானத்தை பெறவில்லை என்றால் சிக்கலின் உச்சியில் இவர் இருந்திருப்பார். அவரின் முகத்தின் நேர் பார்த்து நயவஞ்சகர்கள் "நருக்" என்று கேட்டிருப்பார்கள் "பரத்தில் இருந்து வந்தால் நீர் ஏன் இதற்கு பணியவில்லை" அதன் விளைவாக கிறிஸ்துவின் நம்பகத்தன்மை மிக குறைந்திருக்கும் என்பதில் மாற்று கருத்திருக்க முடியாது.

"கர்த்தரின் கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்......"(சங் 119:172) என்று பிரதான ஆசாரியனுக்கும். மூப்பர்களுக்கும் தெரிந்திருக்கும். இதனால் தான் இயேசு தம் ஞானஸ்நானத்தை பற்றி கூறுகையில் "எல்லா நீதியையும் நிறைவேற்ற " (மத் 3:15) என்றார். தேவனுடைய கற்பனையின்படி செய்தோம் என்றால் அது நம்மை நீதிமானாக்கும். இயேசு கூறினதை மறக்க வேண்டாம் "..........பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்" என்றார் (யோவான் 8:29)

நாமும் அப்படி பிதாவை பிரியப்படுத்தும் வண்ணம் செயல்படுவோம்!

**Jason Roberts**

## பாவம்

ஏதேன் தோட்டத்தில் பாவம் ஆரம்பித்தது
கெத்சமனே தோட்டத்தில் பாவ விமோசனம் ஆரம்பித்தது.

# தேவனை மகிமைப்படுத்துவோம் வாருங்கள்

இழந்துபோனதை தேடி வந்த இறைமகன் இயேசு தமது இனத்தாரான யூதர்களுக்கு மறுமொழி கூறுகையில் "..........என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன். நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை அதை தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்" என்றார் (யோவான் 8:49.50)

மனித கண்களால் பார்க்க முடியாத மாசற்ற தேவனை இவ்வுலகிற்கு காண்பிக்கவே வந்தார். மாறாத தேவனின் ஒரே மைந்தன் இயேசு அவருடைய மகிமையின் பிரகாசமும். அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார் (எபி 1:3) இந்த பூமியில் அவர் இருந்த காலத்தில் எல்லா வகையிலும் அவரை கனம் பண்ணவும். அவரையே மகிமைப்படுத்தவும் செய்தார். தன்னலமில்லா தமையனாயிருந்ததாலே தனக்கென்று மகிமையை தேடவில்லை. அப்படி தேடியிருந்தால் "தம்மைதாமே வெறுமையாக்கி. அடிமையின் ரூபமெடுத்து. மனுஷர் சாயலாயிருக்கமாட்டார்" (பிலி 2:7) தம்மைத்தாமே தாழ்த்தி கோர பயங்கரமான சிலுவையின் மரணத்தை ருசிபார்த்திருக்க வேண்டிய வேறொரு காரணமுமில்லை. சிலுவையில் மரிக்கும் நபரை சிலுவை மகிமைப்படுத்தாது மாறாக அது சாபப்படுத்தும்(உபா 21:23): அது ஒரு நபரின் அடிப்படை குணத்தை வெளிப்படுத்தும். ஆனால். பாவம் அறியாத புண்ணியன் இயேசுவோ. ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாளிடம். தூய ஆவியானவரால் பிறந்து. இப்படி கொடிய மரணத்தை ஏற்றுக்கொண்டு. தன் மகிமையைத் துறந்து. மகிமையை தேடுகிற அல்லது அதற்கு தகுதியான பிதாவை மகிமைப்படுத்தினார். இயேசு தமது பிதாவின்-சித்தத்திற்கு பூரணமாய் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தேவன் ஒருவரே மகிமைக்கு பாத்திராமாயிருப்பதால் அதை அவர் தேடுகிறார். இயேசு அவரை மகிமைப்படுத்துவது தவறென்று எண்ணவில்லை. பரிசுத்த தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று நமக்கு போதிக்கிறார். நாம் ஏன் அவரை மகிமைப்படுத்த கூடாது. தேவன் மகிமையைத் தேடுவதால் அப்படி செய்வதில் நமக்கு வெட்கம் தேவையில்லை. நாம் அவரை மகிமைப்படுத்தும்போது அவரை பிரியப்படுத்துகிறோம். இப்பொழுது நாம் அவரை மகிமைப்படுத்தினால். கிறிஸ்துவின் காலத்தில் அவர் நம்மை மகிமைப்படுத்துவார்.(ரோ 8:18)

ஆகவே இப்பொழுதே. அவரை எப்பொழுதும. எல்லா வழிகளிலும் மகிமைப்படுத்த தீர்மானிப்போம்!

**Thomas R. Dohline**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20. MAR 99
MAR 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு "**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

BOOK-POST

TO

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.